# மலையக சமூகத்தில் பெண்களின் வகிபாகம் : 'ஒரு கூடைக் கொழுந்து சிறுகதைத் தொகுதியை மையப்படுத்திய ஓர்ஆய்வு

**எஸ்.நிஷாந்தினி**[1]

1. தற்காலிக உதவி விரிவுரையாளர் (தமிழ்), மொழித்துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**Email - nishaseu512@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையில் மலையக இலக்கியம் எனும் புதியதொரு இலக்கியத் தோற்றத்திற்கு காரணமாக விளங்கியவர்களே மலையக மக்கள். இம்மக்களின் வாழ்வியலை அடையாளப்படுத்துவதாக ஆரம்பகால கவிதை முயற்சிகளும் (கும்மி, தெம்மாங்கு, சிந்து) அதனைத் தொடர்ந்து வந்த கட்டுரை, சிறுகதை, நாவல் போன்றனவும் விளங்குகின்றன.மலையக மக்களையும் அவர்களது வாழ்வியல் பிரச்சினைகளையும் அவலங்களையும் யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்துவதில் சிறுகதைகள் தனித்துவம் பெற்றவைகளாக விளங்குகின்றன. அந்தவகையில் அன்றாட வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கும் தனிநபர்களை தன் சிறுகதைகளினூடாக கண் முன்னே காட்சிப்படுத்திய சிறுகதையாசிரியர்களுள் என்.எஸ்.எம். ராமையாவும் ஒருவராவார். இவரது சிறுகதைகள் மலையக மக்களின் துயர் நிறைந்த வாழ்வினை அவர்கள் எதிர்கொண்ட சவால்களை கண்முன்னே காட்சிப்படுத்தும் விதம் தனித்தன்மை பெற்றதாகவே அமைகின்றன. கவிதைகளிலும் காவியங்களிலும் பாடும் பொருளாகிய பெண்கள் சமூக மாற்றத்தின் விளைவாக பல்வேறு சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு இயல்பாகவே உள்வாங்கப்பட்டனர். பொதுவாக அவதானிக்கையில் சமூகத்தில் காணப்படுகின்ற பால் நிலை அடிப்படையிலான பாரபட்சங்கள், ஒடுக்குமுறைகள் அவற்றின் ஊடாக துளிர்விடும் எதிர்மறை சிந்தனைகள் போன்றன பெண்களை ஒரு குறுகிய வட்டத்தினுள் அமைந்த வாழ்க்கைக்கு தயார் செய்வதாகவே அமைந்தன. இந்நிலையானது பல்வேறு இலக்கியங்கள் வாயிலாகவும் காலங்காலமாக எடுத்துக்காட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் தொழில் கூலிகளாக அழைக்கப்பட்டு வந்த மலையக மக்களுள் தொழில் ரீதியாக பெண்களும் தங்களது வகிபாகத்தை முழுமையாக வழங்கியவர்களாகவே அடையாளம் காணப்படுகின்றனர்.தங்களது உடல் வலிமையால் கடின உழைப்பை வழங்கக் கூடியவர்களும் அன்றாட வாழ்க்கை போராட்டத்தில் சிக்கித் தவிப்பவர்களாகவும் குடும்பம் என்ற அடிப்படையில் பாரிய சவால்களை எதிர்கொள்பவர்களாகவும் அடையாளம் காண்பிக்கப்படுபவர்கள் ஆண்களே எனும் சிந்தனைப் போக்கை மாற்றியமைத்தவைகளாகவே என்.எஸ்.எம். ராமையாவின் சிறுகதைகளும் அவற்றினூடாக படைக்கப்பட்ட பாத்திரங்களும் வலம் வருகின்றன. இவை கதை நகர்விற்காகவும் இலக்கிய சுவாரஸ்யங்களுக்காகவும் படைக்கப்பட்டவையாக அல்லாமல் இன்றளவில் மாற்றம் பெறாத மலையக பெண்களின் வாழ்வியலையும் சித்திரிப்பவை என்றே குறிப்பிட வேண்டும். பொதுவாக மலைகத் தொழிலாளர்களின் பிரச்சினைகளையும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால் நிறைந்த வாழ்க்கை, தொழில் முறைகளையும் அடையாளபப்படுத்தி மலையக இலக்கியங்கள், கட்டுரைகள், ஆய்வுகள் போன்றன எடுத்துரைக்கின்ற நிலை காணப்படுகின்றது. இந்நிலையில், மலையக சமூகத்தில் பெண்களின் வகிபாகம் குறித்தும் அவர்களது இருப்பின் முக்கியத்துவம் குறித்தும் தனித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையே காணப்படுகின்றது.ஒரு கூடைக்கொழுந்து சிறுகதைத் தொகுதியில் இடம்பெறும் 'ஒரு கூடைக் கொழுந்து', 'பிஞ்சுக் குவியல்', 'எங்கோ ஒரு தவறு', 'தீக்குளிப்பு', 'முற்றுகை', 'வேட்கை', 'மழை' , 'நிறைவு', 'ரணம்' போன்ற சிறுகதைகளில் மலையக சமூகத்தில் பெண்களின் வகிபாகத்தை சிறப்பாக அவதானிக்கலாம். அந்தவகையில் இச்சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு மலையக சமூகத்தில் பெண்களின் வகிபாகத்தை அடையாளப்படுத்துவதும் அவர்கள் எதிர்கொள்கின்ற சவால்களை இனங்காண்பதும் இவ்வாய்வின் நோக்கமாக அமைந்துள்ளது. ஆய்வுநோக்கத்தை அடைந்துகொள்ளும் பொருட்டு விளக்கமுறை, சமூகவியல் ஆய்வுமுறைகள் கையாளப்பட்டுள்ளன. இதன் பொருட்டு 'ஒரு கூடைக் கொழுந்து' சிறுகதைத் தொகுதி இரண்டாம் நிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வுடன் தொடர்புடைய ஏனைய ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையதள செய்திகள், பிற ஆக்கங்கள் என்பன இவ்வாய்வின் துணைத்தரவுகளாக அமைகின்றன. இறுதியாக இவ்வாய்வானது மலையக சமூகத்தில் பெண்கள் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மிகவும் முக்கியமான வகிபாகத்தை பெற்று வருகின்றனர் என்பதை எடுத்துக்காட்டுவதையும் அதன் பின்னணியில் அவர்கள் எதிர்நோக்கிய சிக்கல்களை அடையாளப்படுத்துவதும் இவ்வாய்வின் முடிவாக அமையும்.

**திறவுச் சொற்கள்** : மலையகம், மலையகமக்கள், ஒரு கூடைக் கொழுந்து, மலையக பெண்கள், சிக்கல்கள், வகிபாகம்

## அறிமுகம்

மலையக சமூகத்தை நிலைகளனாகக் கொண்டு தோன்றிய இலக்கியங்களிலே சிறுகதைகள், மலையக வாழ்க்கை முறையின் நடப்பியலை களமாகக் கொண்டு தோன்றியவைகளாகும். இத்தகைய சிறுகதைகள் சமூக பிரச்சினைகளைகளமாகக் கொண்டு படைக்கப்பட்ட அதேவேளை தனிமனிதஉறவுகள், தனிமனித இயலாமை, பிரச்சினைக்குரிய மனித வாழ்வின் மிகநுண்ணிய பகுதிகள் போன்றவற்றை அடையாளங்கண்டு சித்திரிக்கக்கூடிய வகையிலும் படைக்கப்பட்டுள்ளன

தனிமனிதன் என்ற வகுப்பு ரீதியான பார்வையில் மலையக சமூகத்திலே பெண்கள் பெற்று வகிபாகத்தினை அளவிட்டு கூற முடியாத தன்மையே காணப்படுகின்றதெனலாம். காரணம் சமூக ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ மலையக சமூகத்தின் நிலை துன்பகரமாக பார்க்கப்படுகின்ற போது அதன் பின்னணியில் மலையக பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளும் வாழ்வியல் போராட்டங்களும் தங்களது வாழ்வை முன்னோக்கி நகர்த்திச் செல்வதற்கு அவர்கள் முகங்கொடுக்கும் சவால்களும் எண்ணிலடங்காதவையாகும். ஆரம்ப காலம் முதலாக இத்தகைய சிக்கலான சூழ்நிலைகள் உருவாகி, விருட்சமாகி நிற்கின்ற தன்மை காணப்படுகின்றது. காலம் மாறிய போதிலும் அவர்களுக்கான தீர்வுகள் என்பது சாத்தியமற்றதாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மலையக சமூகத்திலே பெண்கள் தாம் வாழுகின்ற சகூக சூழ்நிலைகளில் இத்தகைய சிக்கல்கள் தங்களை சூழ்ந்துள்ளதாக உணர்ந்தாலும் அதிலிருந்து வெளியேற முடியாத, தீர்வு காண முடியாத நிர்ப்பந்தங்கள் தொடரவே செய்கின்றன. இத்தகைய சிக்கல்களும் சவால்களும் அடிப்படையில் அவர்களது குடும்பம், அவர்களை சூழ்ந்த சமூக வகுப்பினர்களாலேயே கட்டமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய நிலையை நாம் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இயல்பாக 'ஒரு கூடைக் கொழுந்து' எனும் சிறுகதைத் தொகுதியில் இடம்பெறும் சிறுகதைகள் எடுத்துரைப்பனவாக இடம்பெற்றுள்ளன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

மலையக சமூகத்தில் பெண்களின் வகிபாகம் குறித்து ஒரு கூடைக் கொழுந்து சிறுகதைத் தொகுதியில் இடம்பெறும் சிறுகதைகளில் எடுத்துரைக்கப்பட்டிருப்பதை பின்வருமாறு நோக்கலாம்.

1. மலையக சமூகத்தில் பெண்களின் வகிபாகத்தை முதன்மைப்படுத்திக் கூறும் சிறுகதைகளை அடையாளப்படுத்தல்.
2. மலையக பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை, எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துரைத்து மலையக சமூகத்தில் அவர்களின் வகிபாகத்தினை அடையாளப்படுத்தல்.

**மலையக சமூகத்தில் பெண்களின் வகிபாகத்தை முதன்மைப்படுத்திக் கூறும் சிறுகதைகளை அடையாளப்படுத்தல்.**

மலையக மண்ணின் எழுத்திற்கு பெரும் மதிப்பை தேடித்தந்த என்.எஸ்.எம். ராமையாவின் சிறுகதைகளின் தொகுப்பே 'ஒரு கூடைக் கொழுந்து|. 2014ஆம் ஆண்டு மறுபதிப்பாக வெளிவந்த இத்தொகுதி பன்னிரெண்டு சிறுகதைகளை உள்ளடக்கியதாக அமைகின்றது. இவற்றுள்,

1. பிஞ்சுக்குவியல்
2. மழை
3. எங்கோ ஒரு தவறு
4. நிறைவு
5. ஒரு கூடை கொழுந்து
6. தீக்குளிப்பு
7. ரணம்
8. முற்றுகை

ஆகிய சிறுகதைகள் பெண்களின் வகிபாகம், அவர்களின் இருப்பிற்கு விடுக்கப்படும் சவால்கள், எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை இயல்பாக எடுத்துரைப்பனவாக அமைகின்றன. பொதுவாக இச்சிறுகதைகளிலே இடம்பெறுகின்ற கதாபாத்திரங்கள் வாழ்க்கையின் பிரச்சினைகளுக்குத் தங்கள் சொந்த ஆளுமையினால் சவால் விடுபவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர்.

**மலையக பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை, எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துரைத்து மலையக சமூகத்தில் அவர்களின் வகிபாகத்தினை அடையாளப்படுத்தல்.**

பொதுவாக அவதானிக்கும் போது மலையக சமூகத்தில் பெண்களின் வகிபாகத்தினை அறியும் பொருட்டு மலையக பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை, எதிர்கொள்ளும் சவால்களை இரு விதமாக நோக்கலாம்.

1. சமூக ரீதியான வகிபாகம்
2. பொருளாதார ரீதியான வகிபாகம்

**சமூக ரீதியான வகிபாகம்**

“அச்சமும் நாணும் மடனும்
முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப” (தொல்.பொருளதிகாரம்.களவியல்.1044)

என பெண்மையின் குணநலன்களை உரைக்கிறது தொல்காப்பியம். இத்தகைய பெண்களை பாடாத புலவர்களும் இல்லை, படைப்பாளர்களும் இல்லை, படைப்புகளும் இல்லை எனலாம். கவிதையில் கற்பனை இணைவதனைப் போலவே படைப்புகளில் பெண்கள் இணைந்திருந்தனர். இந்நிலை தற்கால இலக்கியங்களிலும் தொடர்வதும் ஆச்சரியத்திற்கில்லை. இவ்வாறிருக்க மலையக இலக்கியம் விதிவிலக்கல்ல. இருப்பினும் பெண்கள் படைக்கப்பட்ட விதத்திலேயே மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதெனலாம். கற்பனைக்காகவும் கவிதை நயத்திற்காகவும் படைக்கப்பட்ட பெண் பாத்திரங்கள் மலையக இலக்கியங்களிலே குறிப்பாக என்.எஸ்.எம். ராமையாவின் சிறுகதைகளில் வாழ்வியலோடு போராடும் பாத்திரங்களாக படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமூகம் என்ற அடிப்படையில் நோக்கினால் குடும்பம், திருமணம், தாய்மை, முதுமை, தொழில் ரீதியான உறவுகள் என பல்வேறு மட்டங்களிலும் மலையக பெண்கள் சிக்கல்களையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது. இத்தகைய தன்மைகளை சிறுகதைகள் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன.

‘தீக்குளிப்பு’ என்ற சிறுகதையை எடுத்துநோக்கும் போது அதில் ஒரு பெண்ணின் எதிர்பார்ப்பு, ஏமாற்றம், தாய்மை உணர்வு, குடும்ப நலன் என அத்தனை அம்சங்களையும் முழுமையாக அவதானிக்க முடிகின்றது. இச்சிறுகதையில் படைக்கப்பட்டுள்ள ‘ரஞ்சிதம்’ எனும் கதாபாத்திரமானது குடும்ப நலனுக்காக தனது திருமண ஆசைகளை தியாகம் செய்பவளாக படைக்கப்படுகின்றாள். மலையக சமூகத்தில் உழைக்கும் வர்க்கத்தில் தங்களது முழுமையான உழைப்பினை வழங்கி வருகின்ற பெண்கள், தனது குடும்ப சூழ்நிலையை கருத்திற் கொண்டே தங்களது கனவுகளை வடிவமைத்துக் கொள்கின்றனர். இளவயதில் இயல்பாக ஏற்படக் கூடிய விருப்பங்களையும் குடும்ப சூழ்நிலைக்காக புறந்தள்ளுகின்ற போக்கு இயல்பாகவே இவர்களுக்குள் ஏற்படுகின்றது.

ரஞ்சிதம் தான் விரும்பிய முத்தையாவுடனான வாழ்க்கையை அடையும் ஆவலில் தன் குடும்பத்தை விட்டு அவனது வீட்டுக்குச் செல்கின்றாள். அவ்வாறு சென்ற போதிலும் அவளது எதிர்கால கனவுகளில் சுகமற்ற நிலையே நிலவுகின்றது. பிறந்த வீட்டை விட்டு வெளியே வந்த அவளுக்கென ஆதரவளிக்க முத்தையாவின் குடும்பமே இருந்தாலும் அவள் எண்ணங்களில் உலவுகின்றதென்னவோ அவளின் குடும்பமே. இதனை பின்வரும் சிறுகதை பகுதியினூடாக அவதானிக்கலாம்.“உள்ளத்தின் ஒருபகுதி இருண்டு போய், அதற்குள்ளிருந்து நான்கைந்து அழுகுரல்கள் கேட்பது போலிருந்தது. தராசுப்படிப்பல் மாதிரி இருக்கும் தன் தம்பி தங்கைகளின் நினைவே மனதுக்குள் சுழன்றது. ரஞ்சிதத்தின் குடும்பம் பெரியது. உருப்படியாக மூன்று பேருடைய உழைப்பில் ஒன்பது வயிறுகள் பசியாற வேண்டும். இதுவரையுமே அது ஒழுங்காக நடைபெறவில்லையென்றால் இனி…?

…தலையில் தான் சுமத்தியிருக்கும் பாரத்தை எண்ணுகையில் தான் செய்வது பெரிய அநியாயம் என்று தோன்றியது. உடம்பு கொஞ்சம் தெம்பாக இருக்கும் நாளில் மட்டும் ஏதோ பெயர் பண்ணுகிறவள் இனிக் கட்டாயம் வேலைக்குப் போக வேண்டிவரும்.

கறுத்து இளைத்து நடக்கவே ஜீவனில்லாத தன் தாய் வேலைக்குப் போவதைக் கற்பனை பண்ணவே சிரமமாக இருந்தது ரஞ்சிதத்துக்கு."[1]

இவ்வாறு தன் திருமண கனவுகளோடு குடும்பத்தை புறந்தள்ளி ஓடிய ரஞ்சிதம், கனவுகளை மேலும் கட்டமைக்க முடியாமல் தனது உள்ளத்தில் தோன்றி கிளை பரப்பி நின்ற காதலை, தனது எண்ணங்களை, உணர்வுகளை, ஆசைகளை புறக்கணித்து மீண்டும் தன் குடும்பத்தை நோக்கியே விரைகின்றாள். இங்கு குடும்ப ரீதியாக பெண்ணின் வகிபாகம் எத்தகையதென்பதை உணர முடிகின்றது. தாயின் உடல் நிலையும் தந்தையின் வருமான பற்றாக்குறையும் ஒருபுறம் அவளை தடுக்க, தனது சகோதரன் அவளுக்கு ஒரு குழந்தையாகவே தென்படுகின்றான். இவ்வாறு இள வயதிலே பாரிய பொறுப்புகளை சுமந்து முழுமையான வாழ்வின் புரிதலோடு தன் கனவுகளை இழந்து குடும்ப ரீதியான வகிபாகத்தினை வழங்குபவளாக ரஞ்சிதம் படைக்கப்பட்டுள்ளாள். இத்தகைய நிலை கதையின் நகர்வை அர்த்தப்படுத்துவதற்காக படைக்கப்பட்டதல்ல, தற்போதைய மலையக சமூகத்திலும் பெண்கள் இவ்வாறானதொரு இக்கட்டான சூழ்நிலையில் பிணைந்தே காணப்பட வேண்டியிருக்கின்றமையை உயர்த்துவதற்காகவே படைக்கப்பட்டதென்று குறிப்பிடுவதில் எவ்வித தவறுமில்லை.

தொழில் ரீதியான உறவுகள் குறித்து அவதானிக்கும் போது ஆண்களுக்கு நிகராக உழைப்பை வழங்கக் கூடியவர்களாகவும் குடும்பச் சுமையை ஏற்று சிரமம் பாராது உழைக்கக் கூடியவர்களாகவும் தொழில் ரீதியான சூழலில் உடல், உள ரீதியாக ஏற்படக்கூடிய சிரமங்களை தாங்கி செயற்படுபவர்களாகவும் பெண்களின் வகிபாகம் அடையாளப்படுத்தப்படுகின்றது.இந்த அடிப்படையில் நோக்குகையில் ஒரு கூடை கொழுந்து, நிறைவு, ரணம், முற்றுகை சிறுகதைகளில் படைக்கப்பட்டுள்ள அலமேலு, லெட்சுமி, வள்ளி, செங்கமலம், சரசு போன்ற கதாபாத்திரங்கள் சிறப்பாக படைக்கப்பட்டுள்ளனர் என்றே குறிப்பிட வேண்டும்.

"நிறுப்பதற்காக காத்து நின்ற வரிசை மெல்ல மெல்ல நகர்ந்துக் கொண்டிருந்தது. லெட்சுமியின் முறை வந்தது. சாக்குக்காரன் லெட்சுமியின் கூடையைத் தூக்கினான் அது கல்லாகக் கனத்தது. அடியிற் கையைக் கொடுத்துத் தூக்கித் தட்டில் கொட்டப் பார்த்தான் முடியவில்லை. காலால் மிதித்து அமுக்கப்பட்ட கொழுந்து சிமெந்து மாதிரி இறுகிப்போய் இருந்தது."[2]

என்ற பகுதியை அவதானிக்கும் போது பெண்களின் கடின உழைப்பு அடையாளப்படுத்தப்படுவதனை அறியலாம். இவர்கள் குடும்பச் சுமை காரணமாக சிறு வயது முதலே உழைக்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு உள்ளாகின்றனர். இவ்வாறு ஆரம்பமாகும் உழைப்பின் தொடக்கம் அவர்களது வாழ்வின் இறுதி வரை தொடரவே செய்கின்றது. ஆரம்பத்தில் தாய், தந்தை, சகோதரர்களின் நலனில் பங்கெடுத்தவர்கள் திருமணத்தின் பின்னர் தனது கணவன், கணவனின் குடும்பத்தினர், தனது பிள்ளைகள் என்ற வட்டத்தினுள் சுழலுகின்றனர். பெரும்பாலும் அவர்களது தந்தையோ வாழ்வின் துணையாக அமையும் கணவனோ குடிப்பழக்கத்திற்கு ஆளாகின்ற போது அப்பெண்களின் வாழ்க்கை பெரும்பாலும் இன்னல்களுக்குள் இயல்பாகவே சிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

"கிழவி திரும்பி அலமேலுப் பக்கம் பார்த்துவிட்டு மௌனம் சாதிக்கிறாள். ஆயினும் அவள் சொல்லாத பதில் என் மனதுக்குள் கேட்கிறது. ஏழைகளுக்குச் சுகமாவது சொகுசாவது! கஷ்டமோ நஷ்டமோ அன்றைக்கு வந்து 'பேரு‖ போட்டால் தானே முப்பது நாளும் அடுப்பெரிக்க முடியும்! அதிலும் அவன் புருஷன் ஒரு குடிகார மொட்டை!"[3]

என்ற 'நிறைவு‖ சிறுகதையின் பகுதியை அவதானிக்கும் போது மேற்குறித்த சூழ்நிலையை இனங்காண முடிகின்றது.

---

[1] ராமையா, என்.எஸ்.எம்., (2014), ஒரு கூடை கொழுந்து, ப.73

[2] ராமையா, என்.எஸ்.எம்., (2014), ஒரு கூடை கொழுந்து, ப.63

[3]மேலது, பக்.47, 48

பெரும்பாலான பெண்கள் குடும்பச் சுமையை தாங்கி மலையக சமூகத்திலே தனக்கான அடையாளமாகவே அதனை பெற்றவர்களாக வாழ்கின்றனர். இவை அனைத்திற்கும் பின்னணியாக அமைவது குடும்பச் சூழலே. சிறு வயதிலேயே குடும்பத்தை பராமரிக்கக் கூடிய பொறுப்புத் தன்மையானது அநேகமான பெண்களிடம் ஏற்பட்டு வருகின்றது. இத்தகைய தன்மையை நாம் 'ரணம்| rpWfijapNy mtjhdpf;fyhk;.

"அந்தத் தேயிலைக் காட்டிலே பொறந்து வளர்ந்து பதினேழு வருஷத்துக்குப் பொறகு அன்னைக்குத்தான் கொழுந்துன்னா என்னான்னு செங்கு சொல்லிக் குடுத்துச்சு! இது நல்ல கொமிட் இல்லே?
....ஐயய்ய! நான் பட்ட பாடு... நான் ஒரு மரம் எடுக்குறதுக்குள்ளே செங்கமலம் பத்து மரத்திலே கொழுந்த எடுத்துடும். என்னைப் பார்த்து 'சுருக்காவா! ஆளோடவா'ன்னு சொல்லிக்கிட்டு அது என்னாலே முடியாத காரியம்னு தெரிஞ்சு – என்னோட நெறையையும் சேர்த்து எடுத்துகிட்டு போச்சு"[4]

என்ற பகுதியை அவதானிக்கையில் கொழுந்து பறிக்கும் ஆண் பதினேழு வயது நிரம்பியவனாகவும் அவனை விட ஒரு வயது மூத்தவளாக செங்கமலம் படைக்கப்பட்டுள்ளதோடு அவ்வயதிலேயே அவள் அத்தொழிலின் அனுபவத்தை நிறைவாக பெற்றவளாகவும் காட்டப்படுகின்றாள்.

திருமணம் என்பது ஒவ்வொரு பெண்களின் வாழ்க்கையிலும் பல கனவுகளை சுமந்து நடைபெறும் நிகழ்வாக அமைகின்றது. இந்நிலையில் மலையக பெண்கள் விதிவிலக்கானவர்கள் அல்ல. இருப்பினும் இத்திருமணத்தில் ஏற்படுகின்ற தடைகளும் திருமணத்தின் பின் ஏற்படுகின்ற சவால்களும் ஏராளமானவையாகக் காணப்படுகின்றன. திருமண ஏற்பாடுகள் நடைபெறும் போது பெண்களின் விருப்பினையோ அவர்களது எண்ணங்களையோ வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் பெரும்பாலும் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

"இரண்டு மூன்று மரம் கொழுந்து எடுத்த பிறகு தெய்வானை ரகசியம் போல் "அப்பா ராத்திரி அண்ணனுக்கிட்ட சொல்லிருச்சு" என்றாள்.
"என்னென்னு?"
"இப்படி ஒன்னைக் கேட்டிருக்கின்னு"
"ம்" கனமான பொருள் ஒன்று நெஞ்சுக்குள் விழுந்த மாதிரி கனத்தது மனம்.
அண்ணனுக்கு இன்னும் கொஞ்சம் சொனங்கிச் செய்யணும்னு நெனைப்பு போலே இருக்கு. ஆனா அம்மா ஒடம்பு இருக்கிற நெலமையிலே சொணங்க முடியாது அப்படீன்னு அப்பா சொல்லிடுச்சி.
அங்கு யந்திரம் பழுதாகிவிட்டது. ஆகவே இவள் தேவைப்படுகிறாள்... அதுவும் அவசரமாக.
இந்த சின்ன வட்டத்துக்குள் அந்த வாழ்க்கையின் மகத்துவம் அடங்கிவிட்டது. அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது."[5]

இப்பகுதியை அவதானிக்கும் போது சரசு எனும் பெண்ணின் திருமண ஏற்பாடுகள் நடந்த போதும் அவளிடம் அது குறித்த பேச்சுக்கள் எதுவும் இடம்பெறவில்லை. மேலும், பெண் கேட்டு வந்தவரின் வீட்டில் அவனது தாய் சுகவீனமடைந்து இருப்பதால், அவளின் இடத்தை நிறைவு செய்ய ஒருவர் தேவைப்படுவதாகவும் அதற்காக இவளை தெரிவு செய்திருப்பதாகவும் கதை நகர்கின்றது. இது இயல்பாக இடம்பெற்று வருகின்ற அம்சமாகவே அவதானிக்கப்படுகிறது. இவ்வாறு இடம்பெறும் போது ஒரு பெண்ணானவள், தனது குடும்பத்தின் விருப்பத்திற்காகவோ கட்டாயத்தின் பேரிலோ அவளது மண வாழ்க்கையை விரும்பியோ விரும்பாமலோ ஏற்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றாள்.

[4] ராமையா, என்.எஸ்.எம்., (2014), ஒரு கூடை கொழுந்து, பக்.78,79
[5] மேலது, ப.92

குடும்பச் சுமையை சிரமேற்று சிறு ஆறுதலாகவேனும் தொழில் அமையலாம் என்ற நம்பிக்கையோடு தொழில் களம் நோக்கிச் செல்பவர்களுக்கு அங்கே காத்திருக்கும் சவால்கள் எண்ணற்றவைகள் என்றேக் குறிப்பிட வேண்டும். சக ஆண்களுடன் பழகும் விதம், அவ்விதத்தை சக தொழிலாளர்கள் நோக்கும் விதம், பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள், உயரதிகாரிகளின் அத்துமீறல்கள், அவர்களின் விருப்பத்திற்கு இணங்காத பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், மலையக தோட்டப்புற பெண்களை இலகுவாக ஏமாற்ற முடியும் என்கின்ற ஒரு சிலரின் அசமந்த போக்கு, பெற்றோரின் கவனயீனத்தாலும் அக்கறையின்மையாலும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என சவால்கள் ஏராளமாக அடுக்கி வைக்கப்படுகின்றன. இத்தகைய சவால் நிலைகளை சிறுகதைகள் மிகத் தத்ரூபமாகவே சித்திரிக்கின்றன.

"அவனது முரட்டுப்பிடி கொஞ்சமேனும் தளராததாகவும் காணப்பட்டதால் அவள் ஒன்றும் செய்ய இயலாமல் தப்பித்துக்கொள்ள சந்தர்ப்பத்திற்காக காத்திருக்க வேண்டியதாயிற்று. அவனது வருடல் முன்னேறிக்கொண்டிருந்தது.
…அவள் வெகுண்டு எழுந்தாள். அவனிடம் இழக்காத மறு கரத்தால் குடையை எடுத்து எங்கு விழுகிறது என்று பார்க்காமல் மடார் மடார் என்று கண்மூடித்தனமாக அடிக்கத் துவங்கினாள்.
…இதைச் சற்றும் எதிர்பாராத டிரைவர் அவசரமாக எழும்பி அந்த இருளை விட்டு வாசலை நோக்கி ஓடத் துவங்கினான்.
…சில பேப்பர்களை விரித்து அதில் கரமே தலையணையாகக் கமலம் ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தாள். போதை தெளிந்தும் தெளியாத நிலையில் முனுசாமி இன்னொரு பேப்பர் படுக்கையில் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தான்."[6]

என்ற 'எங்கோ ஒரு தவறு| vDk; rpWfijg; gFjpahdJ Fbg;gof;fk; nfhz;l je;ijapdhy; xU ngz;Zf;F Neu;e;j இன்னல் எடுத்துக்காட்டப்படுகிறது. இங்கு தன்னை தானே காத்துக்கொள்ள வேண்டிய பாரிய சவால் அவள் முன் வைக்கப்படுகிறது. தன்னை சமூகத்தின் முறையற்ற பிடியிலிருந்து காத்துக் கொள்ள வேண்டிய வலிமை அவளால் முன்வைக்கப்பட வேண்டிய சூழல் உருவாக்கப்படுகிறது. பாதுகாப்பாக எண்ணத் தக்க துணை இல்லாத போதும் துணையாக இருப்பவர்களும் உதவாத தன்மை பெறும் போதும் ஒரு பெண்ணானவள் தனது இருப்பை தக்க வைக்க முயற்சியெடுக்க வேண்டும். அதேவேளை தன்னை காத்துக்கொள்ள தயாராகவே இருக்க வேண்டும். மேலும் இத்தகைய பெண்கள் அவர்களின் திறமையையும் தன்மானத்தையும் சந்தேகிக்கும் போது அவர்களின் வெளிப்பாட்டு நிலை வேறு விதமாக அமைந்துவிடும். இவ்வாறானதொரு தன்மையினை ஆசிரியர்,
"குனிந்த தலை சட்டென்று நிமிர்ந்து ஐயாவை, கங்காணியை அப்புறம் ஆட்களை ஒரு முறை சிலிர்த்து பார்த்தது. தூங்கிக் கொண்டிருக்கும் புலியை விலாவில் குத்தினால் இப்படித்தான் துள்ளி எழுந்து முறைத்திருக்கும்"[7]
எனக் குறிப்பிடுவதனூடாக அறியலாம். தன்மானம் சீண்டப்படும் பொழுது எவரும் பொறுமை காப்பது கிடையாது என்பதற்கு ஒரு கூடை கொழுந்து சிறுகதையிலே படைக்கப்பட்ட லட்சுமி கதாபாத்திரம் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். அவளின் சபதத்திற்கும் அவள் முன் வைக்கப்பட்ட சவாலுக்கும் எந்தத் துணையுமின்றி தன்னந்தனியாக நின்று போராடி வெற்றி பெறுகிறாள். இவ்வாறான தன்மையே பெரும்பாலான மலையக பெண்களால் அனுபவிக்கப்படுகிறது. வாழ்வோடும் சரி சமூகத்தின் பார்வை கோணங்களோடும் சரி தனக்கெதிரான சூழ்நிலைகளின் போதும் சரி தனித்து போராடக் கூடிய வல்லமையும் மனத்திடமும் அவர்களிடம் ஓங்கி வளர்ந்துள்ளதனை சம காலத்திலுமே அவதானிக்கக் கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பொருளாதார நிலைப்பாடு**

---

[6] ராமையா, என்.எஸ்.எம்., (2014), ஒரு கூடை கொழுந்து, பக்.41, 42
[7] ராமையா, என்.எஸ்.எம்., (2014), ஒரு கூடை கொழுந்து, ப.59

இலங்கையின் பொருளாதாரத்தை நிலைபெறச் செய்வதில் பாரிய பங்களிப்பினை வழங்குகின்ற மலையக மக்களின் பொருளாதார தரமானது, நிலை பெற்றதாக இல்லை. குடும்பத்தின் பொருளாதார பாரத்தை குறைத்து வைக்கும் நோக்கோடு வேலைக்குச் செல்லும் இளவயது பெண்கள், குடும்ப அங்கத்தவர்கள் நிலை பற்றி எண்ணி தனக்கான வாழ்க்கையையும் வாழ்வின் விருப்பங்களையும் தியாகம் செய்து வாழ்கின்ற நிலை மலையகப் பெண்களுக்கே உரிய சிறப்பம்சமாகிவிட்டது.

பொருளாதார வசதியற்ற குடும்பத்தில் பிறந்த பெண்கள் அவர்களது குடும்பச்சுமையினை சுமந்து வாழ்வது வழக்கமாகிவிட்ட நிலையில், பொதுவாக ஒரு பெண்ணை திருமணம் செய்து வைப்பதில் கூட தடைகளை ஏற்படுத்தி வருவதாக அக்குடும்ப நிலை விளங்குகின்றது. திருமணம் செய்து வைப்பதனூடாக குடும்பத்திற்கு வருகின்ற வருமான வழியில் தடை ஏற்படலாம் என்ற எண்ணத்தில் திருமண ஏற்பாடுகளை மேற்கொள்ளாத நிலை பெரும்பாலான குடும்பங்களில் இடம்பெற்று வருகின்றதெனலாம். 'தீக்குளிப்பு' சிறுகதையில் வருகின்ற ரஞ்சிதத்தின் தந்தை தனது மகளுக்கு திருமண வயது வந்துவிட்டது என்பதனை அறிந்தும் அவளுக்காக வரும் வரன்களை தன் சுயநலத்திற்காகவும் பொருளாதார சுமையினை குறைத்துக் கொள்வதற்காகவும் தட்டிக்கழித்து வருவதனை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாக பின்வரும் பகுதிகளைக் குறிப்பிடலாம்.

"வயசு இருபத்தஞ்சு ஆகுதே ஒனக்கு! பத்தாதா? இன்னம் எவ்வளவு காலத்துக்கு இப்பிடியே இருக்கிறதாம்? என்றாள் தொடர்ந்து.

…ஒங்க அப்பனுக்கு பண ஆசை! என்று முத்தாய்ப்பு வைத்தாள். ஒன்னைக் கட்டிக் குடுத்துட்டா எம்பது தொன்னூறுன்னு ஒன் சம்பளம் இல்லாம போகுமில்ல! உணர்வுக் கொந்தளிப்பில் சில நிமிஷங்கள் மௌனமாகக் கழிந்தன."[8]

கர்ப்பிணி பெண்கள் தம் பிரசவக் காலத்திலே முறையான வைத்திய ஆலோசனைகளைப் பெற்று உரிய காலத்தில் ஓய்வெடுத்து பிள்ளையை பெற்றெடுக்க வேண்டியது அவசியம். ஆயினும் இத்தகைய நிலைகள் வெறும் வார்த்தைகளாகவேனும் மலையக பெண் தொழிலாளர்களின் காதுகளுக்கு சென்றடைந்திருக்குமா என்பது சந்தேகமே. ஏனெனில், பொருளாதார பின்னடைவில் அப்பெண்கள் ஏராளமான துன்பங்களை குடும்ப வாழ்வில் எதிர்கொள்ள நேரிடுகின்றது. ஒவ்வொரு நாளையும் பொழுதினையும் போராட்டத்திற்கு மத்தியில் கழிக்க வேண்டிய இக்கட்டான சூழல் உருவாக்கப்படுகிறது. கொழுந்து பறிக்கையிலே பிள்ளையைப் பிரசவிக்கும் தாயின் கதை மூலம் உழைப்பானது மலையக பெண்களின் வாழ்க்கையில் எவ்வாறு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது என்பதை ஆசிரியர் நன்கு உணர வைக்கின்றார். இதனை 'நிறைவு' சிறுகதை சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

"முகம் வெளுத்து, வயிறு பருத்து கணுக்கால்வரை தொங்கும் சேலை வயிற்றுப் பருமனால் முழங்கால் கெண்டைச் சதைகள் வரை தூக்கி நிற்க, காலில் பச்சை நரம்பு தெரிகிறது. ஒரு கை இடுப்பில், நிதானமில்லாத நடையினால் இட்ட அடிக்கும் எடுத்த அடிக்கும் உடல் பக்கம் பக்கமாகச் சாய்கிறது.
நின்று கவனிக்கிறேன். ஐயோ பாவம்! என்றிருக்கிறது எனக்கு. 'நிறைமாத கர்ப்பிணி| வேலைக்கு வருகிறாள்."[9]

இவ்வாறு வந்தவள் தேயிலை மலையிலேயே தன் குழந்தையை பெற்றெடுக்கிறாள். தன் உடல் நிலையை காட்டிலும் குடும்பத்தின் பொருளாதார தாக்கமே அவர்களில் பெரும் பாதிப்பை செலுத்துவதாக அமைகிறது. இருப்பினும் முடிந்தவரை தங்களது வாழ்க்கையோடு தங்களது போராட்டத்தை வழங்கக் கூடியவர்களாகவே அவர்கள் பழக்கப்பட்டுவிட்டனர்.

[8]மேலது, ப.70

[9] ராமையா, என்.எஸ்.எம்., (2014), ஒரு கூடை கொழுந்து, ப.47

இவ்வாறு இளம் பெண்களின் இன்னல்களும் சவால்களும் பல்வேறு வழிகளில் நடந்தேறிய வண்ணம் இருக்க, முதுமையடைந்த பெண்களும் தங்கள் வாழ்வை கொண்டு நடத்த போராட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக கணவனை இழந்த பெண்கள் தங்கள் வாழ்வினை மேற்கொள்வதற்காக வாழ்வோடு போராட வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகின்றது. குறிப்பிட்ட வயதினை கடந்த நிலையில் முறையான தொழில் ஒன்றை பெற முடியாது, கிடைக்கின்ற தொழிலை செய்ய வேண்டிய கட்டாயமும் ஏற்படுகின்றது. இவ்வாறான ஒரு இக்கட்டான நிலையை 'பிஞ்சுக்குவியல்| எனும் சிறுகதையிலே அவதானிக்கலாம்.

"இந்த வருஷம் நாற்பத்தைந்து புள்ளைக இருக்கு பேருபதிய. இப்பவே தோட்டத்துலே ஆளு கூட. இத்தனை புள்ளைக்கும் வேலை குடுக்கிறதா இருந்தா ரொம்ப வயசானவங்க நாப்பத்தைஞ்சு பேர பென்சனுலே அனுப்பனும். வயசானவங்க யாராருன்னு லிஸ்ட் எடுத்திருக்கு. அதுலே ஒன்பேரும் இருக்கு…

இப்ப நீ புள்ளக்காம்புராவிலே நின்னா வழக்கமா நிக்கிற கெழவின்னு சொல்லி இன்னும் இரண்டொரு வருசம் வேலை செய்யலாம். முலைக்கோ இல்லாட்டி இஸ்டோருக்கோ போனா ஒனக்கும் பென்சன் ஆடர் வரும். ஓன் இஸ்டம் போல் செய் என்று சொல்லி விட்டு நடக்கத் துவங்கினார் கணக்கப்பிள்ளை.

கிழவி மீண்டும் பிள்ளை மடுவத்திற்கே சென்றாள்.
உதடுகள் வெறுப்போடு முணுமுணுத்துக் கொண்டிருந்தன."[10]

இவ்வாறான பெண்கள் வறுமையானாலும் வயதானாலும் பிறரை நம்பி வாழும் வாழ்க்கையில் எவ்வித பயனுமில்லை என்பதை உணர்ந்தவர்களாகவும் சுய உழைப்பே சிறப்பானதென வாழும் கொள்கை கொண்டவர்களாகவும் சமூகத்தில் தனக்கான சுயமதிப்பையும் இழக்க விரும்பாத வகிபாகத்தை தக்க வைத்து வாழ்கின்றனர்.

பொறுமைக்கே தஞ்சம் என்றாகிவிட்ட நிலையானது, மலையக பெண்களின் வாழ்வினூடாக நிதர்சனமாக்கப்பட்டிருந்தது. இந்நிலையை கடந்து செல்ல முயலும் போது குடும்பம், சமூகம், பொருளாதாரம் என பல திசைகளிலும் தாக்குதல் இடம்பெறுவதும் இறுதியில் துளிர்த்த எண்ணம் முடங்கி போகும் நிலையும் காணப்படவேச் செய்தன. இருப்பினும் எத்தகைய சவால்களையும் முறியடிக்கும் நிலையும் சிக்கல்களையும் பிரச்சினைகளையும் கண்டு கலங்காத மனமும் மலையக சமூகத்திலே அவர்களின் இருப்பை தக்க வைத்துக்கொள்ளவும் அவர்களின் வகிபாகத்தை முறையாக அடையாளப்படுத்தவும் சிறந்த முத்திரைகளாகின்றன எனக் குறிப்பிடலாம்.

**முடிவுரை**

ஆரம்பகாலம் தொடக்கம் மலையகச் சிறுகதைகளின் கருப் பொருளாக மலையக மக்களின் தொடர் இன்னல்களும் பிரச்சினைகளும் அமைந்ததோடு, தனிமனித உணர்வுகளை சித்திரிக்கும் வகையில் காதல், நட்பு போன்ற அம்சங்களை அரசியல், பொருளாதார, வறுமை அடிப்படையிலான விடயங்களோடு இணைத்த வகையில் வெளிப்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களை அவர்களது பிரச்சினைகள் வாயிலாகவும் பல்வேறு சிறுகதைகளில் நேரடியாகவும் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக மலையக மக்களின் வருகையினூடாக ஆரம்பித்த பிரச்சினைகளிலிருந்து தொடர்ந்த பல்வேறு பிரச்சினைகளை அடையாளப்படுத்தியதுடன் காலங்கள் கடந்தநிலையிலும் மாற்றம் பெறாத வாழ்வியல் அம்சங்களை பல்வேறு கோணங்களிலும் சிறுகதைகள் சித்திரித்துள்ளன. அவை பெரும்பாலும் மலையகத் தோட்ட தொழிலாளர்கள் என்ற மையத்திலேயே சுழன்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

[10] ராமையா, என்.எஸ்.எம்., (2014), ஒரு கூடை கொழுந்து, பக்.09, 10

மலையகத் தோட்ட தொழிலாளர்கள் எனும் போது ஆண்களே மலையக சமூகத்தில் பெரும் வகிபாகம் பெறுபவர்களாக அமைகின்றனர். இருப்பினும் ஆண்களுக்கு சமமாக பெண்களும் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தங்களது பங்களிப்பினை செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் மலையக தோட்ட பகுதியினை மையப்படுத்தி கதாபாத்திரங்களை அதற்குள்ளாகவே உலாவச் செய்த சிறுகதையாசிரியர்களுள் என்.எஸ்.எம். ராமையா மிகச் சிறப்பாகவே நோக்கப்படுகின்றார். இவரது ‘ஒரு கூடைக் கொழுந்து| எனும் சிறுகதைத் தொகுதியிலே அமைந்துள்ள சிறுகதைகளை எடுத்துநோக்கும் போது பெரும்பாலனவை மலையக பெண்களின் இருப்பினையும் சமூகத்தில் அவர்களின் வகிபாகத்தினையும் மிகத் துல்லியமாக அடையாளப்படுத்துபவையாக காணப்படுகின்றன.

சமூக ரீதியாக அவதானிக்கும் போது குடும்பம், திருமணம், தாய்மை, முதுமை, தொழில், தொழில் ரீதியான உறவுகள் எனவும் பொருளாதார ரீதியாக அவதானிக்கும் போது வறுமை, குடும்பச் சுமை எனவும் பல்வேறு கோணங்களில் தங்களது சவால்களை ஏற்று சிக்கல்களுக்கு முகங்கொடுத்து எதிர்த்து நின்று போராடுபவர்களாகக் காணப்படுகின்றனர். குடும்பம் என்ற போர்வையில் தங்களது கனவுகளை சிதைக்கும் பெண்களும் திருமணம் என்ற கனவின் அடிப்படையில் தன் விருப்பத்தையே வெளிப்படுத்தாது தவிக்கும் பெண்களும் தனக்காகவன்றி தன் குழந்தைகளுக்காகவேனும் பிரசவ காலத்திலும் தேயிலை மலையை நாடும் பெண்களும் தன் தன்மானத்திற்காய் எத்தகைய சவாலையும் எதிர்கொள்ளத் தயாராகும் பெண்களும் வயதானாலும் தனக்கென தன் உழைப்பே அவசியம் என தொழில் களம் புகும் பெண்களும் இங்கு ஒவ்வொரு சிறுகதையிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளனர்.

பொதுவான பிரச்சினைகள் இங்கே கதைப் பண்புகளாக வடிவமைக்கப்பட்ட போதிலும் பெரும்பாலான கதை நகர்வுகள், மலையக சமூகத்திலே பெண்களின் வகிபாகத்தை துல்லியமாக அடையாளப்படுத்துவதனை அவதானிக்கலாம். மலையக சமூகத்திலே பெண்கள் அனுபவிக்கின்ற சமூக. பொருளாதார ரீதியான பிரச்சினைகளும் சவால்களும் வெறும் கதை போக்கிற்காக பயன்படுத்தப்பட்டவையல்ல. மாற்றம் இல்லாது தொடருகின்ற ரணங்களே கதைகளின் வழியாக அரங்கேற்றப்பட்டுள்ளன எனலாம். அவை சமகாலத்திலும் நிகழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணைகள்**


01. அந்தனி ஜீவா, (1995), மலையகமும் இலக்கியமும், மலையகவெளியீட்டகம், கொழும்பு.
02. அருணாசலம், க., (1989, வைகாசி - ஆனி), “மலையகத்தோட்டத் தொழிலாளர் - ஓர் அறிமுகம்”, கொழுந்து, கொழும்பு.
03. அருணாசலம், க., (1994), மலையகதத் தமிழ் இலக்கியம், தென்றல் வெளியீட்டகம், கொழும்பு.
04. அருணாசலம், க., (1994), மலையகத் தமிழ் இலக்கியம், தென்றல் வெளியீட்டகம், கொழும்பு.
05. அருணாசலம், க., (1997), இலங்கைத் தமிழியல் ஆய்வு முயற்சிகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
06. சந்தனம் சத்தியநாதன், (1999), மலையக அரசியலும் சமூக வாழ்வும், ஞானம் பதிப்பகம், கண்டி.
07. சந்திரசேகரன்,சோ. ,(1989), இலங்கை இந்தியர் வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு–சென்னை.
08. சாரல் நாடன், (1997), மலையகம் வளர்த்த தமிழ், துரைவிவெளியீடு, சென்னை.
09. சாரல் நாடன், (1992.மாசி), “எண்பதுகளில் மலையக இலக்கியம்”, குன்றின் குரல், 30, புஸ்பதானமாவத்த, கண்டி.
10. ராமையா, என்.எஸ்.எம்., (2014), ஒரு கூடை கொழுந்து, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.